[24th March 1959

SRI A. VEDARATHNAM : தனியார் துறையில் இதற்கு உதவி வரவேண்டுமானால், எவ்வளவு அவர்களிடமிருந்து உதவியை அரசாங்கம் எதிர்பார்க்கிறது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்பொழுது போட்டிருக்கிற திட்டப் பிரகாரம் என்ஜியரிங் கல்லூரி ஏற்படுத்துவதாக ஒப்புக்கொண்டால், மத்திய அரசாங்கம் ஒரு பாதி செலவையும், ராஜ்ய சர்க்கார் பாக்கி இருக்கிற பாதியில் கால் பகுதியும், இன்னொரு கால் பகுதி தனியாரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்படிப் பார்க்கும்பொழுது ஒரு என்ஜினீயரிங் கல்லூரிக்கு சுமார் 50 லட்ச ரூபாயிலிருந்து 60 லட்ச ரூபாய் வரையில் செலவு ஆகலாம்.

SRI A. A. RASHEED : May I know whether the Government have taken into consideration the number of engineers that would be required to implement the schemes in the Third Five-Year Plan? Unless we start more Engineering Colleges this year, how are we to meet the requirement of qualified engineers for implementing the schemes under the Third Five-Year Plan?

THE HON. SRI C. SUBRAMANIAM : That has been kept in mind in starting engineering colleges. But my own view is that we should increase the number of politechnics.

SRI S. NAGARAJA MONIGAR : ஸார் இது விஷயமாக கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொன்னபோது இந்த வருஷம் அந்த மாதிரி தேவை ஒன்றும் தெரியவில்லை, அடுத்த வருஷம் அதைக் குறித்து யோசிக்கப்படும் என்பது போலச் சொன்னார்கள். நமது எதிர்காலத்தில் தேவைப்படும் என்ஜினீயர்களைப் பற்றிய நோக்கமானது 12 மாதங்களுக்குள்ளாக வளர்ந்து விடக் கூடிய அளவுக்கு அப்படி என்ன இருக்கிறது என்று விளக்குவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதற்குள்ளாக மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் அளவு ஓரளவுக்குத் தெரிந்து விடும்.

Control of filaria in the Kanyakumari District

* 974 *Q.*—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether there is any proposal to introduce a scheme to control filaria in the Kanyakumari District; and

(*b*) if so, what the cost of the scheme is?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI T. T. DANIEL : In view of the fact that this disease is prevailing in the district, will the Government think of introducing a State or all India scheme there, or at least make some provision in the anti-filaria scheme for the control of this disease?

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, now the proposal is to survey the area and instructions have already been issued to take anti-filaria measures. But the national anti-filaria scheme is now tried as a pilot scheme in the four districts of Chingleput, Tanjore, South Arcot and North Arcot, and on the results of that pilot scheme, it will be considered whether it could be extended to the whole State.

24th March 1959]

SRI T. SAMPATH : May I know the result obtained in Tanjore?

THE HON. SRI M. A. MANICKAVELU : No, Sir, we have not yet formulated the result.

SRI A. VEDARATHNAM : பைலேரியா வியாதி கொசுக்கள் மூலமாக பரப்பப்படுகிறது என்று கூறப்படுகிறதே, அந்த கொசு கன்ட்ரோலைப் பற்றி அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறதா ? இந்த வியாதி அதிகமாகப் பரவி இருக்கிற இடங்களில் கொசுக்களை கட்டுப்படுத்த அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : பைலெரியா கன்ட்ரோல் என்றால் கொசுவை ஒழிக்கிறதற்குத் தான் திட்டம்.

Cultivating Tenants (Payment of Fair Rent) Act

* 975 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether there is any proposal before the Government to amend the provisions of the Madras Cultivating Tenants (Payment of Fair Rent) Act, 1956, for giving retrospective effect to the fair rent fixed by the Rent Court under the said Act at least from the date of application to the court?

THE HON. SRI M. A. MANICKAVELU : The matter is under the consideration of the Government.

SRI N. S. RAMALINGAM : கனம் சபாநாயகர் அவர்களே, 5 எக்கர் அல்லது 10 எக்கருக்குக் குறைவாக வைத்துக்கொண்டுள்ள நிலச்சுவாந்தார்களுக்கு இந்தச் சட்டத்திலிருந்து விலக்குகொடுப்பதைப்பற்றி அரசாங்கம் யோசிக்குமா ? அப்படியானால் அதைத் திருத்துவதற்கான சட்டத்தை எப்போது கொண்டுவரப்படும் என்று அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: அந்த விஷயம் பரிசீலனையில் இருக்கிறது என்று முன்பே சொன்னேன். இப்போதும் பரிசீலனையில் தான் இருக்கிறது.

SRI S. M. ANNAMALAI : ஸார், இந்த விவசாயிகளுக்காகக்கொண்டு வந்திருக்கின்ற சட்டங்களில் பல ஓட்டைகள் இருக்கின்றன. இவைகளை சர்க்காரே பரிசீலனை செய்வதற்கு பதிலாக, மாற்றுக் கட்சிகளிலுள்ள சட்ட மன்ற உறுப்பினர்களையும் சேர்த்து ஒரு குழுவை அமைத்து அவைகளை மாற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுப்பார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இன்னும் அதிக ஓட்டைகள் விழுந்து விடும். (சிரிப்பு.)

THE HON. SRI M. A. MANICKAVELU : இப்போது ஓட்டைகளைக் கண்டு பிடிக்கும் விஷயத்தில் ஈடுபட்டிருக்கிறோம். அதையெல்லாம் கண்டு பிடித்து பிற்பாடு திருத்துவதற்கான மசோதா யோசிக்கப்படும்.

SRI T. R. RAMAMIRTHA THONDAMAN : ஸார், இந்த நியாய வாரச் சட்டம், மற்றும் இது போன்ற வேறு பல பாதுகாப்புச் சட்டங்கள் காரணமாக கோர்ட்டுகளுக்குப் போய் சாகுபடியாளர்களுக்குச் சரியான பாது காப்பு இல்லாமல் பல இடங்களில் அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதிலுள்ள குறைபாடுகளைக் கண்டுபிடித்து அதைத் திருத்தி அமைக்க ஒரு திருத்தச் சட்டத்தைக் கொண்டு வருவதைப்பற்றி அரசாங்கம் யோசிக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த குறைபாடுகளைத்தான் எதிரில் இருக்கிற அங்கத்தினர் ஓட்டைகள் என்று சொன்னார்கள். இரண்டுக் கும் ஒரே அர்த்தம் தான்.